# பகுதி IV

# பகுதி IV

## 2010 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 1 |
| 2. | 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம் | 7 |

## 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

தவணை தவறுகையிலுள்ள வரிகளை அறவிடுவதற்கென காலத்தால் பிணிக்கப்பட்ட முறையில் சீர்வடிக்கம் செய்யப்பட்டதும் துரிதமானதுமானதொரு நடைமுறையொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் தவணை தவறுகையிலுள்ள வரிகளை குறித்த சில சூழ்நிலைகளில் பதிவழிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

குறித்தசில குறித்துரைக்கப்படும் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டவையும் நீண்டகாலமாக தவணை தவறுகையிலுள்ளவையுமான வரிகளை துரிதமாக அறவிடுவதற்கான செயற்பாட்டமைப்பொன்றை உருவாக்குவது தவிர்க்கொணாததாகியுள்ளது ஆதலாலும்:

அத்துடன், அத்தகைய நடைமுறைக்கு வசதியளிப்பதற்கு தவணை தவறுகையிலுள்ள இந்த வரிகளை சமாளிக்கக் கூடியதும் நியாயப்படுத்தக் கூடியதுமான முறையொன்றில் அறவிடுவதற்கும், வருங்காலத்தில் தவணைதவறுகையிலுள்ள வரிகள் நியாயமான வரையறைக்குள் பேணப்படுவதையும் இப்பணியை பொறுப்பிக்கப்பெற்ற அலுவலர்கள் வரிகளை சேகரித்தல் தொடர்பில் மேலும் பதில்கூறும் பொறுப்புடையவர்களாக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கும் அறவீட்டு முறையொன்றை உருவாக்குவதும் அவசியமாகியுள்ளதாதலாலும்:

அத்துடன் தவணை தவறுகையிலுள்ள சில வரிகளைப் பதிவழிப்பதற்கு தெள்ளத்தெளிந்ததும் பொறுப்புடைமையுள்ளதுமான நடைமுறையொன்றைக் கடைப்பிடிப்பதும் அவசியமாகியுள்ளதாதலாலும்:

ஆதலால், இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-

1. இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இப்பிரிவின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி சபாநாயகரின் சான்று புறக்குறிப்பிடப்பட்ட தேதியன்று பயனுறுவதாதல் வேண்டும்.

2. எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் கீழ் 2009, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் விதிப்பனவும் அறவீடும் செய்யப்பட்டவையும் இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு அல்லது ஏற்புடையதற்பாலதானவிடத்து, அத்தகைய ஏதேனும் வரியை அறவிடுவதற்காக அத்தகைய எவையேனும் சட்டங்களிற் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மேன்முறையீட்டு நடவடிக்கை முறைகள் முடிவடைந்த பின்னர் அத்தகைய எவையேனும் சட்டங்களின்கீழ் தொடர்ந்தும் தவணை தவறுகையிலுள்ளவையுமான வரிகளின் (இது இச்சட்டத்தில் “தவணை தவறுகையிலுள்ள வரி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறவீட்டிற்கு, விடுவிப்புக்கு அல்லது பதிவழிப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :

   ஆயின், எவ்வாறாயினும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் வரியை அறவிடுவதற்கு எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையைப் பின்பற்றி தவணை தவறியவர் தவணை தவறுகையிலுள்ள அத்தகைய வரியை தவணைக் கொடுப்பனவுகளில் அல்லது வேறு வகையில் செலுத்தித் தீர்ப்பதற்கு உடன்பட்டுள்ளவிடத்தும் அல்லது பயனுறுதியுள்ள ஏற்பாடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அதன் பின்னர் சம்பந்தப்பட்ட தவணை தவறியவர் விடயத்திற்கேற்ப அத்தகைய உடன்படிக்கையுடன் அல்லது ஏற்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்தும், அத்தகைய உடன்படிக்கை அல்லது ஏற்பாடு நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி ஆக்கப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஏற்பாட்டின் நியதிகளின்படி செலுத்தப்படாதெஞ்சியுள்ள மீதிப்பணத்தொகையின் அறவீடு தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மதியுரைக்குழுவொன்று அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் “குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இவர்களுள் ஒரு உறுப்பினர் விடயத்திற்கேற்ப, உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவராக இருத்தல் வேண்டும்

என்பதுடன், இவர் குழுவின் தவிசாளராகவுமிருத்தல் வேண்டும். ஏனைய நான்கு உறுப்பினர்களும் வரியிறுப்பனவுச் சட்டத்தில், கணக்கியலிலும், கணக்காய்விலும், வணிக முகாமைத்துவத்திலும் அல்லது நிதித்துறையில் அறிவும் அனுபவமும் கொண்டவர்களும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளவர்களுமான ஆட்களுக்கிடையேயிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், தவிசாளர் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) குழு, அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் எல்லா அலுவல்களையும் நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) அமைச்சர் அதற்கென காட்டப்படும் காரணங்களுக்காக குழுவின் உறுப்பினர் ஒருவரை அதன்பொருட்டு அவருக்கு அனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் அவரது பதவியிலிருந்து நீக்கலாம். குழுவின் உறுப்பினர் ஒருவர் அப் பயன்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் அத்துடன் அத்தகைய பதவி விலகலானது அது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது பயனுறுதல் வேண்டும்.

(5) குழு உறுப்பினர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மதிப்பூதியம் செலுத்தப்படலாம்.

4. (1) குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) தவணைதவறுகையிலுள்ள ஏதேனும் வரியின் பதிவழிப்பு தொடர்பில் 7 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட தொடர்பாடல்களுக்கு மறுமொழியளித்தல் அத்துடன்

(ஆ) அதன் மதியுரைக்கென அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அமைச்சருக்கு மதியுரை வழங்குதல்.

(2) குழு, அதன் பணிகளை நிறைவேற்றுகையில் அத்தகைய குழுவின் ஆழ்ந்த ஆராய்விற்கென அதன் முன்னுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் எந்த ஆளினால் தகவல் எதனையும் வழங்க அல்லது ஆவணம் எதனையும் முன்வைக்க இயலும் என அது கருதுகின்றதோ அந்த எவரேனும் ஆளை கூப்பிட்டழைப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. தவணை தவறுகையிலுள்ள வரி அறவீட்டுக்கூறு என அழைக்கப்படும் கூறொன்று ஆணையாளர் தலைமையதிபதியின் பணித்துறை வரம்பிற்குள் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒரு பிரதி ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய கூறுக்குப் பொறுப்பாக குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்.

6. ஆணையாளர் தலைமையதிபதி, குழுவின் நியமனத்தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தவணை தவறுகையிலுள்ள வரி அறவீட்டுக்கூறினால் பின்வருவனவற்றின் தவணை தவறுகையிலுள்ள வரிகளை இனங்கண்டு அறிக்கையொன்றைத் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்:-

(அ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள்

(ஆ) அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சிகள்

(இ) 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்புமுயற்சிகளை பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கூட்டுத்தாபனங்களாகத் தாபிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்புமுயற்சிகள்

(ஈ) அரசாங்க அமைச்சுகள்

(உ) அரசாங்கத் திணைக்களங்கள் அத்துடன்

(ஊ) எவையேனும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் உட்பட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள்.

7. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமை இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அடையாளங்காணப்பட்ட ஏதேனும் நிறுவனங்களின் தவணைதவறுகையிலுள்ள வரிகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) தவணைதவறுகையிலுள்ள வரியாக வருமதியாக இருக்கின்றவாறு பதிவுசெய்யப்பட்ட தொகையின் செம்மைபற்றி சம்பந்தப்பட்ட ஆட்களிடம் சரி பார்த்து அத்துடன்

(ஆ) அத்தகைய நிறுவனம் அதன் வரிப்பொறுப்புகளை நிறைவுசெய்வதற்கு அரசாங்க நிதியளிப்பின்மீது தங்கியுள்ளது என திறைசேரிச் செயலாளரிடமிருந்து உறுதிப்படுத்துகையைப் பெற்று, அத்தகைய இனங்காணப்பட்ட நிறுவனத்தின் தவணை தவறு கையிலுள்ள வரியை பதிவழிப்புச் செய்வதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவணைதவறுகையிலுள்ள ஏதேனும் வரியை பதிவழிப்புச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் அந்நிகழ்வை குழுவுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், குழு அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்ற மூன்று மாதங்களுக்குள் குறிப்புரைகள் எவற்றையும் செய்வதற்கு உரித்துடையதாதலும் வேண்டும். குழு எவையேனும் குறிப்புரைகளைச் செய்யும்பட்சத்தில் அத்தகைய குறிப்புரைகளுக்கு உடனடியாக பகிர்வுசெய்வது ஆணையாளர் தலைமையதிபதியின் பொறுப்பாதல் வேண்டும்.

8. தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் வரி இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் பதிவழிக்கப்படுமிடத்து -

(அ) ஆணையாளர் தலைமையதிபதி எந்தச் சட்டத்தின்கீழ் தவணை தவறுகையிலுள்ள வரி விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்படுகின்றதோ அந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள இரகசியம் தொடர்பான ஏற்பாடு எவ்வாறிருப்பினும், அத்தகைய பதிவழிப்பின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகவலை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும் அத்துடன்

(ஆ) பதிவழிக்கப்பட்டுள்ள தவணைதவறுகையிலுள்ள வரி, எந்தச் சட்டத்தின் கீழ் அத்தகைய வரி அறவிடப்பட்டு விதிப்பனவு செய்யப்பட்டதோ அந்த இயைபான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பின்னர் அறவிடப்படும் பட்சத்தில், அவ்வாறு அறவிடப்பட்ட தொகை தவணைதவறியவருக்கு மீளளிப்புச் செய்யப்படுதலாகாது.

9. (1) ஏதேனும் தவணைதவறுகையிலுள்ள வரி 7 ஆம் பிரிவின்கீழ் பதிவழிக்கப்படாதவிடத்து -

(அ) தவணைதவறுகையிலுள்ள தவணைப்பணக் கொடுப்பனவுக்கு ஆணையாளர் தலைமையதிபதியுடன் தவணை தவறியவரால் செய்துகொள்ளப்பட்டிருக்கக்கூடிய உடன்படிக்கை அல்லது

(ஆ) அறவீட்டிற்கு நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் எவையும் கோப்பிடப்பட்டுள்ளவிடத்து தவிர,எந்தச் சட்டத்தின் கீழ் அத்தகைய வரிவிதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் அத்தகையவரியின் அறவீட்டிற்கு வழக்கு நடவடிக்கை எதுவும் தொடங்கப்பட்டமை,

எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி தவணை தவறப்பட்டுள்ள வரியாக வருமதியான தொகையின் விவரங்களைக் கொடுத்தும், அத்துடன் அத்தகைய தொகை அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற அறுபது நாட்களுக்குள் செலுத்தித் தீர்க்கப்படவேண்டுமென வேண்டுகோள்விடுத்தும் சம்பந்தப்பட்ட தவணைதவறியவருக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றை வழங்கப்பெற்ற தவணைதவறியவொருவர் அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட அறுபது நாட்கள் முடிவடையுமுன்னர் -

(அ) தவணைதவறுகையிலுள்ள வரித்தொகையை ஆணையாளர் தலைமையதிபதியுடன் உடன்பட்டுக் கொள்ளவேண்டியவாறு தவணைக் கொடுப்பனவுகளில் செலுத்தித் தீர்ப்பதற்கு அத்தகைய தவணை தவறியவர் அனுமதிக்கப்பட வேண்டும் என் அல்லது

(ஆ) அறிவித்தல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு தவணை தவறுகையிலுள்ள வரியின் கொடுப்பனவு தொடர்பில் எவையேனும் ஆட்சேபனைகளையெழுப்பி,

ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுதலாம்.

(3) தவணைதவறியவரொருவர் தவணை தவறுகையிலுள்ள வரியின் கொடுப்பனவை தவணைக் கொடுப்பனவில் செய்வதற்கு வேண்டுகோள் விடுக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி வருமதியான தொகையின் கொடுப்பனவு அத்தகைய

உடன்படிக்கையின் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குள் முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்கமைய அத்தகைய கொடுப்பனவுக்கு உடன்படலாம். ஆணையாளர் தலைமையதிபதி தவணைதவறியவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் விபரங்களைக் குழுவுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தவணை தவறுகையிலுள்ள வரியின் கொடுப்பனவு தொடர்பில் தவணை தவறியவர் எவையேனும் ஆட்சேபனைகளை எழுப்புமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்ற அறுபது தினங்களுக்குள் அது தொடர்பில் அவரது முடிவை எடுத்தல் வேண்டும் என்பதுடன், ஆட்சேபனை சம்பந்தப்பட்ட வரிப் பொறுப்பின் மீள் நிர்ணயத்தை ஈடுபடுத்துமிடத்து அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகையை விஞ்சிய தவணை தவறுகையிலுள்ள வரியின் மிகை எதுவுமிருப்பின் அதனை அவர் விடுவித்தலும் வேண்டும்.

10. எந்தத் தவணை தவறியவருக்கு 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று அனுப்பப்பட்டதோ அந்தத் தவணை தவறியவரொருவர் :-

(அ) அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விடையளிக்கத் தவறுமிடத்து அல்லது

(ஆ) தவணை தவறுகையிலுள்ள வரியை தவணைக் கொடுப்பனவுகளில் செலுத்துவதாக ஆணையாளர் தலைமையதிபதியுடன் உடன்படிக்கையொன்று செய்துவிட்டு முப்பது நாட்களுக்குமேல் அத்தகைய தவணைக் கொடுப்பனவுகள் எவற்றையும் செலுத்தத் தவறியுள்ளவிடத்து,

ஆணையாளர் தலைமையதிபதி தவணை தவறியவருக்கு தவணைதவறுகை அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் தவணை தவறுகையிலுள்ள வரியாக வருமதியான தொகை அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் மாகாணமொன்றுக்குத் தாபிக்கப்பட்டதும் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாண மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளையால் குடியியல் நியாயாதிக்கத்தால் தத்துவமளிக்கப்பட்டதுமான நீதிமன்றமொன்றில் அதன்பொருட்டு தொடரப்பட்ட வழக்கொன்றின் மூலம் அறவிடப்படுதலும் வேண்டும்.

11. ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் தவணை தவறுகையிலுள்ள வரியின் ஏதேனும் அறவீட்டின் நோக்கத்திற்கு அதன்பொருட்டு வழங்கப்பட்ட அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளை தேவைப்படுத்தலாம் என்பதுடன், எந்தத் தகவலுக்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டதோ அந்தத் தகவலை அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கொடுத்துதவுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும். ஆயினும், ஏதேனும் காரணத்திற்காக அத்தகைய ஆள் கோரப்பட்ட தகவலைக் கொடுத்துதவ இயலாதவராக இருக்குமிடத்து, அக் காரணங்களை உடனடியாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

12. 2010, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடையும் ஏதேனும் பஞ்சாங்க ஆண்டின் முடிவில் உள்ளவாறு இச் சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் தவணை தவறுகையிலுள்ள எவையேனும் வரிகளின் கூட்டு மொத்தமானது, அதன்மீது திரளும் ஏதேனும் தண்டப் பணம் அல்லது பிடித்துவைக்கப்பட்ட அல்லது பிற்போடப்பட்ட ஏதேனும் வரியின் பாகம் உள்ளடக்கப்படாமல், உடன் முற்போந்த ஆண்டின் கூட்டுமொத்தத்தின்மேல் உடன் முற்போந்த ஆண்டில் சொல்லப்பட்ட சட்டங்களின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்ட வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வரியின் மூன்று சதவீதத்தை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துதல் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

13. (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் 2010, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் பஞ்சாங்க ஆண்டின் முடிவில் உள்ளவாறு தவணை தவறுகையிலுள்ள வரிகள் அதன்மீது திரளும் ஏதேனும் தண்டப்பணம் அல்லது பிடித்துவைக்கப்பட்ட அல்லது பிடித்து வைக்கப்பட்ட வரியின் ஏதேனும் பாகம் உள்ளடக்கப்படாமல், அதன் கூட்டுமொத்தமானது உடன்முற்போந்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வரித் தவணைதவறுகையின் கூட்டுமொத்தத்தின்மேல் சொல்லப்பட்ட சட்டங்களின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்ட வரிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட உடன்முற்போந்த ஆண்டிலான மொத்த வரி வருமானத்தின் மூன்று சதவீதத்தை விஞ்சுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அந்த ஆண்டின் இறுதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அத்தகைய விஞ்சுகைக்கான காரணங்களைக் கொடுத்து அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விஞ்சுகையைச் சரிக்கட்டுவதற்குக் கையாளப்படக்கூடிய ஏதேனும் பரிகரிப்பு நடவடிக்கை தொடர்பில் விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அவரால் தரப்பட்ட காரணங்கள் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அவர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் செய்யப்பட்ட விதப்புரைகளுக்குப் பயனளிப்பதற்கு அவசியமானவை என ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்றவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதியால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அவரது அறிக்கையில் அவரால் தரப்பட்டுள்ள காரணங்கள் அத்தகைய விஞ்சுகை ஏற்படுவதற்குப் போதுமானதென அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து, அவரது தொடர்பாடல் கிடைக்கப்பெற்ற ஆறு மாதங்களுக்குள் அவ்வுட்பிரிவால் விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுமாறு அமைச்சர் ஆணையாளர் தலைமையதிபதியை எழுத்தில் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வேண்டுதலொன்றுடன் அவ்வுட்பிரிவின்கீழ்க் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அமைச்சரவையானது, ஆணையாளர் தலைமையதிபதிக் கெதிராக அச்சூழ்நிலைகளில் தோதானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

14. குழுவின் உறுப்பினரொவ்வொருவரும், அத்தகைய உறுப்பினராகத் தமது கடமைகளைத் தொடங்குமுன்னர் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் குழுவின் பணிகளைப் புரிகையில் அவரதுஅறிவுக்கு வந்துள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கடுமையான இரகசியம் பேண உறுதிபூண்டு வெளிப்படுத்துகையொன்றுக்கு ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் அத்தகைய ஏதேனும் கருமத்தை -

(அ) ஏதேனும் நீதிமன்றத்தால் வெளிவிடுமாறு தேவைப்படுத்தினால் அல்லது கோரப்பட்டாலன்றி அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தமது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகவன்றி

வெளிவிடமாட்டாரென உறுதிபூணுதலும் வேண்டும்.

15. ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் பணிகளை அல்லது தத்துவங்களை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட சிரேஷ்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எவரேனும் பிரதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு, சிரேஷ்ட ஆணையாளருக்கு, ஆணையாளருக்கு, பிரதி ஆணையாளருக்கு அல்லது வரி மதிப்பீட்டாளர் ஒருவருக்குக் கையளிக்கலாம்.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -
"ஆணையாளர் தலைமையபதிபதி", "சிரேஷ்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதி", "பிரதி ஆணையாளர் தலைமையதிபதி", "சிரேஷ்ட ஆணையாளர்", "ஆணையாளர்", "பிரதி ஆணையாளர்" அத்துடன் "வரி மதிப்பீட்டாளர்"" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தவணை தவறியவர்" என்பது, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எந்த ஆளின் வரி தவணை தவறுகையிலுள்ளதோ அந்த எவரேனும் ஆள் எனப் பொருள்படும் அத்துடன்

"அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சி" என்பது, 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்புமுயற்சி (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் கொள்ளப்பட்ட அல்லது அதற்கு உரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சியொன்று எனப் பொருள்படும்.

18. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான முதலாம் அட்டவணை அவ்வட்டவணையின் (3) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(4) 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வரிகளின் தவணை தவறுகை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள்.".

## அட்டவணை (பிரிவு 2)

1. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்
2. 1971 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, மூலதன விதிப்பனவுச் சட்டம்
3. 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுகள் வரிச்சட்டம்
4. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைவிதிப்பனவுச் சட்டம்
5. 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச் சொத்து வரிச்சட்டம்
6. 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்
7. 2004 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்
8. 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் - பாகம் I
9. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் - பாகம் I
10. 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் மீதான வரிச்சட்டம்
11. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
12. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
13. 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
14. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
15. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்
16. 1964 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலாப வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
17. 1967 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரிசி மானிய வரிச் சட்டம்
18. 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசத்தைப் பாதுகாக்கும் உதவு தொகைச் சட்டம்
19. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம்
20. 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வ வரிமீதான மிகைவரிச்சட்டம்
21. 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமான வரிமீதான மிகைவரிச்சட்டம்
22. 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமான வரிமீதான மிகைவரிச்சட்டம்
23. 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச்சட்டம்
24. 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வ வரிமீதான மிகைவரிச்சட்டம்
25. 1991 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
26. 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
27. 1993 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
28. 1994 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
29. 1995 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
30. 2001 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி(திருத்தச்) சட்டம்
31. 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டம்
32. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்

# 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கத்தின் விளைவாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிச சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-

1. இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்

2. 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்கத்தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் நீக்கப்படுவதன் மேல் -

(அ) நீக்கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் அத்தகைய அலுவலர்களின் அல்லது ஊழியர்களின் சேவைகள் பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு அத்தியாவசியமானவை என திறைசேரிச் செயலாளரால் கருதப்படின், நீக்கப்பட்ட தேதியிலிருந்து பகிரங்க சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் ஆட்சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலர்களும் ஊழியர்களும் நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட நியதிநிபந்தனைகளை விடக் குறையாத அனுகூலமான நியதிநிபந்தனைகள் மீது பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தில் பதவி வகித்தலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நியதிநிபந்தனைகள் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் தனிப்பட்டவையாக இருத்தல் வேண்டும்:

(ஆ) நீக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளனவாக இருப்பவையும், அவற்றுக்கு இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு ஒரு திறத்தவராக உள்ளவையும் அல்லது ஆணைக்குழுவின் பெயரில் இருப்பவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புகளும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாசனங்களும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்துக்கேற்ப இலங்கை அரசாங்கத்தினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது அதன்பெயரில் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உறுதிகளாகவும், முறிகளாகவும், உடன்படிக்கைகளாகவும், உத்தரவாதங்களாகவும், அற்றோணித் தத்துவங்களாகவும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புகளாகவும் மற்றும் எத்தன்மை யினவையுமான ஏனைய சாசனங்களாகவும் கருதப்படுதலும் வேண்டும்;

(இ) இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் நீக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எத்தன்மையினவுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்;

(ஈ) நீக்கப்பட்ட நாளுக்கு உடன் முற்போந்த நாளன்று பயனுள்ளதாக இருக்கும் ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின்சார்பாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தினால் பதிவீடு செய்யப்படும் எல்லாத் தீர்ப்புகளும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அல்லது அதற்கெதிராக பதிவீடு செய்யப்பட்ட தீர்ப்பொன்றாக, தீர்வை அல்லது கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

4. நீக்கப்பட்ட தேதியன்று பயனுள்ளவையாக இருக்கும் இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

6. இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -
"இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு" என்பது, 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு என்று பொருள்படும்